பங்கள் வந்திருக்கின்றன. அரசு, முதலிலே, கூட்டுறவுத் துறையிலே மட்டும்தான், சர்க்கரை ஆலைகளை நிறுவுவது என்கிற முடிவை எடுத்திருந்தது. அதை அமைச்சரவை பரிசீலனை செய்து, தனியார்களின் சார்பிலே கூட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நிறுவ முன் வந்தால் அவற்றை மைய அரசுக்குப் பரிந்துரை செய்யலாம் என்று முடிவெடுத்திருக்கிறது. அந்த முடிவிற்கு ஏற்ப, தனியார்கள் மனு செய்யும்போது அவற்றை வரவேற்கிறோம், அவற்றைப் பரிந்துரை செய்து மைய அரசுக்கு அனுப்பத் தயாராக இருக்கிறோம். பெரியார் மாவட்டத்திலே சர்க்கரை ஆலைகள் அமைக்க இரண்டு மனுக்கள் வந்திருக்கின்றன.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு ,1982-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1982-ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென முன்மொழியப் பெற்றுள்ள தீர்மானத்தின் மீது மேலும் விவாதம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற இந்தச் சமயத்தில் இச் சட்ட முன்வடிவினைப் பற்றி சில முக்கிய அம்சங்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் பல்கலைக் கழக வளர்ச்சியினை ஆராயும்போது தமிழகத்தில் பல்கலைக் கழகங்களுடைய எண்ணிக்கை அனைத்தும் சராசரி நிலையிலும் மிகவும் குறை

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS